சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **97 / 2017**

பெயர்: சுந்தரராஜன் வா.சா.1 தேதி **28.10.2025**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. மருத்துவம் சார்ந்த துறையில் எனக்கு அனுபவம் எதுவும் உண்டா என்றால் இல்லை. மேற்படி டிரஸ்டில் மருத்துவர்கள் தான் உள்ளார்களா என்றால் எல்லாரும் மருத்துவர்கள் இல்லை. ஆரம்ப காலகட்டத்தில் மேற்படி டிரஸ்ட் உருவாக்கப்பட்ட சமயத்தில் மருத்துவர்கள் மட்டும் தான் உறுப்பினர்களாக இருந்தார்கள். வாதி டிரஸ்ட்-டில் தற்பொழுது எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் 5 உறுப்பினர்கள் உள்ளார்கள். மேற்படி ஐவரில் மூவர் ஆரம்ப காலகட்டத்தில் இருந்தே உறுப்பினர்களாக உள்ளார்களா என்றால் இல்லை. மேற்படி ஐந்து உறுப்பினர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி டிரஸ்ட்-டில் எப்பொழுது உறுப்பினராக சேர்ந்தேன் என்றால் 2021ம் ஆண்டு சேர்ந்தேன். நான் மேற்படி டிரஸ்ட்-டில் செயலாளராக உள்ளேன். எனக்கு நிர்வாக பொறுப்பு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.2021 ஆண்டுக்கு முன்னர் மேற்படி டிரஸ்ட்-டில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்கின்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் நேரடியாக தெரியும். 2021ம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற கூட்டங்களில் நான் கலந்துக்கொண்டேனா என்றால் இல்லை. எனக்கு மேற்படி டிரஸ்ட்-டில் 2021ம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற சங்கதி நேரடியாக தெரியும் என்பதற்காக எழுத்துபூர்வமான ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் தபால்கள் மற்றும் வில்லங்க சான்றுகள் உள்ளது. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் குத்தகைக்கு டிரஸ்ட்-க்கு 98 ஆண்டுகள் கொடுக்கப்பட்டு நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். அதனை அனுபவம் செய்துவருவதை தடைகள் செய்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 98 ஆண்டுகளுக்கான குத்தகை எந்த ஆண்டு ஏற்பட்டப்பட்டது என்றால் 16.06.2005ம் தேதி ஏற்படுத்தப்பட்டது.

2. மேற்படி 16.06.2005ம் தேதியில் குத்தகை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் நான் அங்கு இல்லை. மேலும் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. மேற்படி குத்தகை பத்திரம் சம்மந்தமாக என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. மணிகண்டன் இறப்பதற்கு முன்பில் இருந்து முதல் பிரதிவாதிக்கும், மேற்படி மணிகண்டனுக்கும் ஏதாவது பேச்சுவார்த்தை , பரிவர்த்தனை நடைபெற்ற சங்கதி எதுவும்

எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் 27.05.2017ம் தேதி சென்னையில் உள்ள எல்டாம்ஸ் ரோட்டில் உள்ள ராதாமணி என்பவர் வீட்டில் வைத்து நானும், மணிகண்டனும் சேர்ந்து முதல் பிரதிவாதியை பார்த்தோம். அவ்வாறு சென்று பார்த்ததற்கு ஆதாரங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. முதல் பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் சுமார் 90 இருக்கும். முதல் பிரதிவாதியை நான் கடைசியாக எப்பொழுது பார்த்தேன் என்றால் மணிகண்டன் இறந்ததற்கு பின்னர் 2 மாதங்கள் கழித்து பார்த்தேன். 2021-ல் பார்த்தேன். மேற்படி முதல் பிரதிவாதியை எதற்காக சந்தித்தேன் என்றால் அவரது நண்பர் மூலமாக என்னை வரசொன்னார் அதனால் சந்தித்தேன். தாவா சொத்து மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால் 114 ஏக்கர் 90 செண்ட். மேற்படி சொத்தானது குரு வித்யா பீடம் டிரஸ்ட்-க்கு பாத்தியப்பட்டது.

3. மேற்படி குரு வித்யா பீடத்தின் டிரஸ்ட்-டின் ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தை 2021ல் தான் பார்த்தேனா என்றால் இல்லை. மணிகண்டன் உயிருடன் இருக்கும்பொழுதே பார்த்துள்ளேன். மேற்படி குரு வித்யா பீடத்தின் டிரஸ்ட்-டின் நோக்கம் என்வென்று தெரியுமா என்றால் பொது டிரஸ்ட் தான் ஆனால் அவர்கள் விருப்பப்பட்டதை செய்துகொள்வார்கள். மேற்படி குரு வித்யா பீடத்தின் டிரஸ்ட்-டின் டிரஸ்டிகள் எத்தனை நபர்கள் என்றால் ஆரம்பத்தில் 3 நபர்கள் இருந்தார்கள். தற்பொழுது எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி 3 நபர்கள் பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 3 நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். குரு வித்யா பீடத்தின் டிரஸ்ட்-டின் பத்திரத்தில் யார் யார் என்ன என்ன பொறுப்புகளில் உள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி குரு வித்யா பீடத்தின் டிரஸ்ட்-டின் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எங்களது டிரஸ்ட்-டின் ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எங்கள் டிரஸ்ட்-டின் ஆவணத்தை எத்தனை முறை திருத்தம் செய்துள்ளோம் என்றால் மூன்று முறை திருத்தம் செய்துள்ளோம். மேற்படி மூன்று முறை திருத்தம் செய்யப்பட்ட சங்கதி நேரடியாக தெரியுமா என்றால் கேட்ட வகையில் தெரியும்.

4. மேற்படி டிரஸ்ட் பத்திரம் மற்றும் திருத்தம் செய்த பத்திரத்தை நான் படித்துள்ளேனா என்றால் ஓரளவுக்கு படித்துள்ளேன். மேற்படி எங்களது டிரஸ்ட் -டில் எந்த ஒரு செயல் செய்யும்பட்சத்தில் தீர்மானம் எதுவும் ஏற்றவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள குத்தகை பத்திரத்தை தயார் செய்வதற்கு முன்னதாக எங்களது டிரஸ்ட்-டில் தீர்மானம் எதுவும் இயற்றப்பட்டதா என்றால் இயற்றப்பட்டுள்ளதாக சொன்னார். எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி தீர்மான நகலை மேற்படி வழக்கில்

தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. உண்மையிலேயே தீர்மானம் ஏற்றப்பட்டியிருந்தால் மேற்படி தீர்மான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி எங்களது டிரஸ்ட்-டின் குத்தகை பத்திரம் யாரால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. மேற்படி குத்தகை பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எதுவும் நேரடியாக தெரியாது என்று சொன்னால் சொன்ன வகையில் எனக்கு தெரியும். இவ்வழக்கில் கண்ட சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி குத்தகை பத்திரம் யாரிடம் இருந்து எழுதி வாங்கப்பட்டது என்று சொன்னால் மேனேஜிங் டிரஸ்ட்டி ராஜகோபால் என்பவரிடம் இருந்து எழுதி வாங்கப்பட்டது.

5.அவ்வாறு எழுதி வாங்குவதற்கு முன்னர் எங்களது டிரஸ்ட்-டில் இருந்து முதல் பிரதிவாதியின் டிரஸ்ட்-டிற்கு எழுத்து பூர்வமாக கடிதம் எதுவும் கொடுத்தோமா என்றால் எனக்கு அதுபற்றி நேரடியாக தெரியாது. முதல் பிரதிவாதியின் டிரஸ்ட்டியான ராஜகோபால் எங்களது டிரஸ்ட்டிக்கு மேற்படி குத்தகை பத்திரம் சம்மந்தமாக எழுத்துபூர்வமாக கடிதம் எதுவும் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். மேற்படி கடிதம் எப்பொழுது யாருக்கு, எந்த சமயத்தில், கொடுக்கப்பட்டது என்கின்ற விவரம் நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. ஆனால் 2004ம் ஆண்டில் கொடுத்தாக சொன்னார்கள். மேற்படி கடிதத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்னே. மேற்படி கடிதத்தில் உள்ள கையெழுத்தினை முதல் பிரதிவாதி இட்டாரா அல்லது வேறுயாரும் இட்டார்களா என்று எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி கடிதம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். கையால் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

6. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.5 ஆவணத்தில் ஒரே ஒரு கையொப்பம் தான் உள்ளது. மேற்படி கடிதத்தில் என்ன எழுதியுள்ளது என்கின்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி கடிதத்தில் 35 ஆண்டு காலம் குத்தகைக்கு என எழுதப்பட்டுள்ளது. அதில் குத்தகை தொகை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தில் சொத்து விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி குருவித்யாபீடம் டிரஸ்டிற்கு இவ்வழக்குச்சொத்தை தவிர வேறு சொத்துக்களும் உண்டா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி குருவித்யாபீடம் டிரஸ்டிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எவ்வளவு என்கின்ற விபரம் எனக்கு தெரியாது, ஆனால் வழக்குச்சொத்தானது முதல் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டு பின்னர் குருவித்யாபீடம் டிரஸ்டிற்கு எழுதி வைத்துள்ளார். மேற்படி குருவித்யாபீடத்தின் டிரஸ்டின் மேனேஜிங் டைரக்டராகத்தான் ராஜகோபாலன் என்பவரை சேர்த்துள்ளேனோ தவிர மேற்படி ராஜகோபாலனை தனிநபராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை.

7. வழக்குச்சொத்தானது குருவித்யாபீட டிரஸ்டிற்கு பாத்தியப்பட்டது என்கின்ற சங்கதிக்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. குருவித்யாபீடத்தின் டிரஸ்டின் பத்திரத்தை படித்துள்ளேனா என்றால் ஓரளவுக்கு படித்துள்ளேன். மேற்படி குருவித்யாபீடம் டிரஸ்டானது கல்விசார்ந்த பொதுநலனுக்காகத்தான் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குருவித்யாபீட டிரஸ்டை நிர்வகிக்கக்கூடிய பொறுப்புகள் இரண்டு டிரஸ்டியிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லை என்று கூறுவதற்காக ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. மேற்படி குருவித்யா பீடத்தின் டிரஸ்டின் கீழ் இயங்கும் பள்ளியின் தாளாளர் ஒரு டிரஸ்டியா என்றால் இல்லை. மேற்படி பள்ளியின் தற்போதைய தாளாளரை வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். மேற்படி தாளாளர் ஏற்கனவே எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து விட்டதால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளோம். மேற்படி குருவித்யா பீடம் டிரஸ்டின் தாளாளர் தனலட்சுமி என்பவர் தான் இவ்வழக்கின் இரண்டாவது பிரதிவாதி, அவரை டிரஸ்டி என்கின்ற கோதாவில் சேர்த்துள்ளோமா என்றால் இல்லை தாளாளர் என்கின்ற கோதாவில் சேர்த்துள்ளோம்.

8. மேற்படி இரண்டாவது பிரதிவாதியின் பெயர் பள்ளி தாளாளர் என்று சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி குத்தகை பத்திரத்தில் இரண்டாவது பிரதிவாதி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குருவித்யா பீடம் டிரஸ்டில் சொத்துக்களை பொறுத்து உரிமை மாற்றம் அல்லது வில்லங்கம் எதுவும் செய்யும் பட்சத்தில் அதுகுறித்து தீர்மானம் இயற்றப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறான தீர்மானம் எதனையும் வாங்கி நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் குத்தகை பத்திரத்திலேயே தீர்மானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை பத்திரத்தில் முதல் பிரதிவாதி மட்டும் கையொப்பம் செய்தால் அது செல்லுபடியாகும் என்பது குறித்தும் செல்லும் தன்மை குறித்தும் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவசியம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. எங்களது டிரஸ்டில் பைலாஸ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குருவித்யா பீடம் டிரஸ்டின் பைலாஸ் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி குத்தகை பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்பாக முதல் பிரதிவாதியை எங்களது டிரஸ்டிலிருந்து எப்போது சந்தித்தார்கள், என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் பேசியதாக சொல்லிக்கொண்டார்கள் நேரடியாக தெரியாது.

9. எங்களுடைய டிரஸ்டின் செயல்பாடுகள் எதுவும் எனக்கு தெரியாது என்பதாலும், வழக்கை நடத்துவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றாலும் சரியல்ல. எங்களது டிரஸ்டில் செயலாளருக்கு என்ன பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இந்த குத்தகை

சார்ந்த நிலம் மற்றும் வேறு சில நிலம் மற்றும் விவசாயம் சார்ந்த விஷயங்கள் மற்றும் நீதிமன்றம் சார்ந்த விஷயங்களில் செயல்படுவதற்கு அதிகாரம் உள்ளது. மேற்படி பொறுப்புகள் அனைத்தும் 2021ம் ஆண்டு தான் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் விவசாயம் நிலம் சம்பந்தப்பட்ட வேலை பார்த்து வந்தேன். அதற்காக ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது சொந்தஊர் பரமத்தி வேலூர். வழக்குச்சொத்திற்கும் எனது ஊருக்கும் 150 கி.மீ தூரம் இருக்கும் என்றால் 90,95 கி.மீ தூரம் இருக்கும். தாவா சொத்து இருக்கும் ஊரில் எனக்கு குடியிருப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது தொழில் விவசாயம். நான் எனது ஊரில் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளது.

10. நான் சொத்துக்கள் எதையும் குத்தகைக்கு கொடுத்துள்ளேனா என்றால் குத்தகைக்கு வாங்கியுள்ளேன். 4 1/2 ஏக்கர் நிலம் குத்தகைக்கு வாங்கியுள்ளேன். வருட குத்தகை எவ்வளவு என்றால் ஒரு ஏக்கருக்கு ரூ.800/-. வழக்குச்சொத்தானது நன்செய் நிலமா அல்லது புன்செய் நிலமா என்றால் நன்செய் நிலம். நான் தாக்கல் செய்துள்ள குத்தகை பத்திரத்தில் குத்தகை எவ்வளவு என்றால் ஏக்கர் 114.90 செண்ட் பூமிக்கு வருட குத்தகை ரூ.5000/-. மேற்படி குத்தகை சம்பந்தமாக இரண்டு பத்திரத்திரங்கள் உள்ளது. ஒன்றில் குத்தகை தொகை ரூ.2,400/- மற்றொன்றில் ரூ.2,600/-. குத்தகை ஏற்படுத்தப்பட்ட பின்னர் குத்தகை தொகையை செலுத்தியுள்ளோமா என்றால் இல்லை, ஆனால் வருடத்திற்கு ஒருமுறை குத்தகை கொடுக்கிறோம். ஒவ்வொரு நிதியாண்டு துவக்கத்தில் குத்தகை தொகை கொடுத்துவிடுவோம். மேற்படி குத்தகை பணத்தை வழங்கியதற்காக எங்களது டிரஸ்டில் கணக்கு வழக்கு உள்ளதா என்றால் அப்பொழுது கணக்கு வழக்கு பார்த்தவருக்குத்தான் தெரியும். மேற்படி கணக்கு வழக்கு தற்போதும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி டிரஸ்டிற்கான தணிக்கையை ஆடிட்டர் தான் வைத்திருப்பார். மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. எங்களது டிரஸ்டிற்கும், முதல் பிரதிவாதி டிரஸ்டிற்கும் குத்தகை எதுவும் இல்லை என்பதால் தான் குத்தகை தொகை சம்பந்தமாக ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல, குத்தகை ரசீதினை தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணத்தில் 35 ஆண்டுகளுக்கு குத்தகை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குத்தகை பத்திரத்திரமான வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களில் 98 ஆண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-6, 7 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை 98 ஆண்டுகளுக்கு என்று வா.சா.ஆ.6

மற்றும் 7யை பெற்றுக்கொண்டோம். 35 ஆண்டிலிருந்து 98 ஆண்டுகளாக உயர்த்தியதற்காக தீர்மான நகல் உள்ளதா என்றால் மேற்படி வா.சா.ஆ.6, 7 ஆவணத்திலேயே உள்ளது, மேற்படி எங்களது டிரஸ்டில் மேற்படி தீர்மான நகல் கைவசம் இல்லை. (சாட்சி தற்போது உள்ளதா என்பதனை பரிசீலிக்க வேண்டும் என கூறுகிறார்).

முதல் பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.10.30 12:42:10 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.